www.ecourtsindia.com

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I,
TIRUCHIRAPPALLI
C.C. 212/2015

Deposition of witness     வா.சா.1
Name                      : ராஜரெத்தினம்
Father  Name              : பரமசிவம்

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

2013 ஆண்டு திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தேர்தல் நடைபெற்றது. அதில் நான் செயலாளராக தேர்வு செய்யப்பட்டேன். அதற்கான ஆதரமாக 20.01.2013 ஆண்டு நிர்வாகிகள் மற்றும் செயல் உறுப்பினர்களின் தேர்வு செய்யப்பட்டதற்கான அறிவிப்பு நகல். அது வாசாஆ 8 (ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது). அசல் வழக்கு எண் 1128/1996 ல் 4–ம் பிரதிவாதியான பொன் தேவராஜன் இந்த வழக்கில் 1 ம் எதிர்மனுதாரராக உள்ளார். அசல் வழக்கு எண் 1128/1996 ல் திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தின் அசையும் அசையா சொத்துக்களை நிர்வகிக்கும் பொருட்டு ஒரு Receiver நியமிக்கப்பட்டு அமலில் இருந்துவந்தநிலையில் மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 114/1996 என்ற வழக்கில் மேற்படி பொன்தேவராஜன் 2 வது பிரதிவாதியாக உள்ளார். மேற்படி வழக்கில் 17.06.1996 ல் தீர்ப்புரையில் நிரந்தர உறுத்துக்கட்டளையாக திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்க நிதியை பொன் தேவராஜனோ, அவரது முகவரோ அல்லது அவரது உத்தர பெற்றவர்களோ எடுக்கக்கூடாது என்றும், கையாளக்கூடாது என்றும், மாற்றி அமைக்கக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை இன்று வரையிலும் அமலில் உள்ளது. இந்நிலையில் எங்கள் போட்டி சங்கமான திருச்சி தஞ்சை புதுக்கோட்டை காயுதேமில்லத் மாவட்ட திரைப்பட சங்க செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட பொன் தேவராஜன் என்பவர் பொருளாளர் துளசி ராமன் என்பவர் மற்றும் சங்க நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் கூட்டாக சதி செய்து திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தின் பெயரில் தேனா வங்கியில் வைப்புத்தொகையாக இருந்த ரூ.5,84,183/– ஐ 23.02.2010 ல் மோசடியான தீர்மானத்தை நிறைவேற்றி தேனா வங்கியின் ஒத்துழைப்புடன் மேற்படி தொகையை கையாடல் செய்துள்ளனர். திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தில் இணை செயலாளராக இருந்த சுராதி ராமமூர்த்தி என்பவர் 27.09.1993 ல்

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-2.pdf

திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கம் கலைக்கப்பட்டதாக ஒரு மோசடியான தீர்மானத்தை ஏற்படுத்தி எங்களது சங்கத்தின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை கையகப்படுத்திக்கொண்டார். அதுசம்பந்தமாக திருச்சி மாவட்ட உரிமையியில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 2402/1993 வழக்கு தொடரப்பட்டு அந்த வழக்கு விசாரணையின்போது 65 மோசடி கையெழுத்துக்கள் இடம் பெற்றிருந்ததும், சங்கத்தின் மினிட் புத்தகம் வெளியில் எடுத்துச்சென்று கையெழுத்து பெறப்பட்டுள்ளதும், சுராதி வாக்குமூலத்தின் மூலமாக நீதிமன்றத்தில் நிருபிக்கப்பட்டு 27.09.1993 ல் ஏற்பட்ட தீர்மானம் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றும், சட்டவிரோதமானது என்றும் 14.03.2008 ல் தீர்ப்புரை வழங்கப்பட்டது. அந்த வழக்கில் 5 வது பிரதிவாதியாக இருந்த சுராதி ராமமூர்த்தி இந்த வழக்கில் 8 வது எதிரியாக உள்ளார். பொன் தேவராஜும் சுராதி ராமமூர்த்தியும் நிர்வாகிகளாக இருந்துகொண்டு திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தின் வைப்புத்தொகையை கையாடல் செய்வதற்கு உறுதுணையாக இருந்துள்ளார்கள். இந்த வழக்கில் ஆரம்பத்தில் 1 ஆம் எதிர் மனுதாரராக இருந்த தேனா வங்கி 02.07.2012 அன்று என்னால் அறிவிப்பு அனுப்பப்பட்டு அறிவிப்பு பெறப்பட்டு எந்தவொரு பதிலும் அனுப்பவில்லை. மேற்படி தேனா வாங்கி அசல் வழக்கு எண் 1128/1996 ல் 11 வது பிரதிவாதியாக இடம் பெற்றுள்ளார். திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தின் சொத்து சம்பந்தமாக நியமிக்கப்பட்ட Receiver தொடர்பான அனைத்து விவரமும் தேனா வங்கிக்கு தெரியும். எதிர்மனுதாரர்களின் கூட்டுசதிக்கு தேனா வங்கி உடந்தையாக இருந்து திருச்சி தஞ்சை மாவட்ட திரைப்பட விநியோக சங்கத்தின் வைப்பு தொகையை எடுப்பதற்கு உதவி புரிந்துள்ளார்கள். எங்களால் அனுப்பப்பட்ட தேனா வங்கி மற்றும் 19 நபர்களுக்கு அனுப்பிய அறிவிப்பை அவர்கள் பெற்றுக்கொண்டார்கள். மற்ற எதிரிகளான ஜோசப் பிரான்சிஸ், தர்மலிங்கம், கருப்பையா, சூர்யகுமார், கபீர் ஆகியோர்களுக்கு வாங்காமல் திருப்பப்பட்டது. அவை வாசாஆ 10.(எண்ணிக்கை 5). சார்பு செய்யப்பட்டதற்கான ஒப்புகை அட்டையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருச்சி தஞ்சை புதுக்கோட்டை காயுதேமில்லத் மாவட்ட திரைப்பட விநியோக சங்க துணை விதிகளுக்கு புறம்பாகவும், அந்த சங்கத்தின் உறுப்பினர் அல்லாத திரைப்பட விநியோகத்தர்கள் மற்றும் திரையரங்க உரிமையாளர்கள், திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு Green Circular, Red

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-2.pdf

Circular, அபாரதம் விதித்தல், கட்டாய நன்கொடை, கட்டப்பஞ்சாயத்து போன்ற சட்டவிரோதமான செயல்களில் ஈடுபட்டதற்கு சங்க பதிவாளர்க்கு பல்வேறு புகார்கள் அனுப்பப்பட்டும் நடவடிக்கை ஏதும் எடுக்காததால் சங்க பதிவாளர் மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு 15107/2013 தாக்கல் செய்யப்பட்டு எங்கள் சங்க கட்டிடம் மீது இடைக்கால தடை பெறப்பட்டு இன்று வரை அமலில் உள்ளது. சட்டவிரோதமாக மோசடியாகவும் நீதிமன்ற உத்தரவுகளை அவமதித்தும் எங்கள் சங்க வைப்புத்தொகையை கையாடல் செய்த பணத்தை இன்றைய தேதிவரை வங்கி வட்டியுடன் திருப்பி செலுத்துமாறும், சட்டவிரோதமாக எங்களது சங்கத்தின் கட்டிடத்தை கையகம் செய்துகொண்ட நபர்களிடம் இருந்து மீட்டுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேற்படி செயல்களுக்கு உடந்தையாக இருந்த நபர்கள் மீது இதச பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேற்சொன்ன அசல் வழக்குகளின் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக எதிரிகள் தரப்பில் இதுநாள்வரை எந்தவொரு மேல்முறையீடும் செய்யப்படவில்லை.

**வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in open court,
interpreted/Read over to the witness and admitted
by the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Tiruchirappalli.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNTP030016392015/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

Advocate